# “இட்லிப் பூ .. அது என் இஷ்டப் பூ ..!” பூ வும் வாடாது . வருமானமும் தேயாது!



பெரியதாக பராமரிப்போ தினசரி பறிப்போ தேவைப்படாத ஒன்றிரண்டு மலர்களும் இருக்கின்றன. அவற்றில் ஒன்று ‘விருட்சிகப் பூ ’ எனப் பரவலாக அழைக்கப்படும் இந்த ‘இட்லிப் பூ’! “பூ சாகுபடியில் விதிவிலக்காக அமைந்ததுதான் இந்த இட்லிப் பூ சாகுபடி! மூன்று நாட்களானாலும் பூ வாடுவதில்லை. நன்கு மலர்ந்த பிறகும், செடியிலேயே ஏழு நாட்கள் வரை பூ தாங்கி நிக்கும் என்கிறார் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், மணிவிழுந்தான் காலனியை சேர்ந்த ‘கால்நடை மருத்துவர்’ சக்திவேல்.பெரியதாக வாசனை ஏதும் இல்லையெனினும், அழகுக்குக் குறைவில்லை. இதனால் இப்பூ வை, வியாபார ரீதியில் சாகுபடி செய்து சாதித்துக் கொண்டிருக்கிறார் சக்திவேல்.

அறுபது சென்ட் நிலத்தில் இட்லிப் பூ சாகுபடியை ஆரம்பித்துள்ள இப் பூ வை சாகுபடி செய்தால் குறைந்தது பத்து வருடத்திற்கு நிலத்தை உழ வேண்டியதில்லை. இரண்டு நாள் கழித்து பூ பறித்தாலும் கெடுதல் இல்லை. தண்ணீர் தேவையும் அதிகமில்லை. ஆரம்ப காலத்தில் வருமானம் குறைவாக இருந்தாலும், செடி வளர, வளர மகசூலும் அதிகமாகி, லாபம் கூடும். “இட்லிப் பூ வுக்கு என்று தனிப் பட்டம் ஏதுவுமில்லை. அடைமழை காலத்தைத் தவிர, மற்ற அனைத்து மாதங்களிலும் நடவு செய்யலாம். வளமான, பாசன வசதி இருக்கின்ற நிலத்தில் புல், களையெல்லாம் நீங்குமாறு இரண்டு சால் உழவு ஓட்டி, விட வேண்டும். இட்லிப் பூ செடி, குறைந்தது பத்து வருடத்திற்காவது நிலைத்து நின்று மகசூல் தரும். அதனால் போதுமான குப்பை உரத்தை அடியுரமாக இடவேண்டும். பார்க்கு பார் ஒன்பது இடை வெளிவிட்டு, செடிக்கு செடி மூன்றடி இடைவெளியில் நடவுசெய்யவும்.

குச்சி மூலம் இனப் பெருக்கம் செய்யப்பட்ட செடிகளை தேர்வு செய்து எடுக்கவும். இட்லிப் பூ பல வண்ணங்களில் இருந்தாலும், சிவப்பு நிற பூ வுக்களுக்குதான் சந்தையில் அதிக வரவேற்பு உள்ளது. அதனால் சிவப்பு நிற பூ வருகின்ற செடிகளை வாங்கணும். பாலிதீன் பையோடதான் செடிகள் வரும். அப்பைகளை நீக்கிவிட்டு மூன்று அடிக்கு ஒரு செடிஎன்கிற விதத்தில் நடவு செய்ய வேண்டும். 60 சென்ட் இடத்துக்கு 1,000 செடிகள் தேவைப்படும்.அறுவடைக்கு செடிகள் வளர குரைந்தது ஆறு மாதங்களாகும். இந்த இடைவெளியில் சின்ன வெங்காயம், சாமந்தி, கொத்தமல்லி, பீன்ஸ், தட்டைப்பயிறு, உளுந்து ஊடுபயிறுகள் செய்து தனியாக லாபம் பார்க்கலாம். சொட்டுநீர்ப் பாசனம் செய்துதால் களை வளர்ச்சி குறைவாக இருக்கும். ஒன்பது அடி இடைவெளியில் ‘பவர்டில்லர்’ வைத்து களை எடுக்கலாம். ஒருநாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் விட்டால் போதும்.

முடிந்த வரைக்கும் இயற்கை முறையில் செய்வதால் ஒவ்வொரு செடிக்கும் அறுபது நாட்களுக்கு ஒரு முறை 50 கிராம் கடலைப் புண்ணாக்கு அல்லது ஆமணக்குப் புண்ணாக்கு, இலுப்பைப் புண்ணாக்கு, புங்கம் புண்ணாக்கு, வேப்பம் புண்ணாக்கு போன்றவற்றில் எது எளிதாக கிடைக்குமோ அதை உபயோகிக்கலாம். எறும்புகள் இட்லிப் பூ வின் தேன் போன்ற திரவத்தை உண்பதால் பூ வின் அடிப்பக்கம் கருப்பு நிறத்திற்கு மாறிவிடும். இதை தடுக்க 50 கிராம் நனையும் கந்தகம், 60 மில்லி மோனோ குரோட்டபாஸ் இவ்விரண்டையும் கலந்து தெளிக்க வேண்டும். செடியின் உயரம் அதிகமாக வளராமல் தடுக்க நுனியைக் கவாத்து செய்தல் வேண்டும்.50 - 80 சதவிகிதம் மலர்ந்த பூக்களைப் பறித்து சந்தைக்கு அனுப்பலாம்.பூக்கள் பெரியதாக இருப்பதால் அதிக எடை கிடைக்கும். நடவு செய்த ஆறாவது மாததிலிருந்தே ஒவ்வொரு வாரமும் ஆறு முதல் எட்டு கிலோ வரை பூ  கிடைக்கும்.

பண்ணிரண்டாவது மாதத்திலிருந்து இரண்டு நாட்களுக்கு ஒரு முறை இதே அளவு பூ  கிடைக்கும்.  1கிலோவிற்கு குறைந்தபட்சமாக 30 ரூபாய் முதல் அதிகபட்சமாக 80 ரூபாய் வரை விலை கிடைக்கும்.  இங்கு விலையும் பூ க்களை சேலம் பூ  வியாபாரிகள் பெற்று பெங்களூருக்கு அனுப்புகிறார்கள். இட்லிப் பூ வை பெண்கள் சூடிக்கொள்வதில்லை. அதன் காரணமாக இப்பூ வை மணவறை மேடை அலங்காரம், பொக்கே(மலர்ச் செண்டு), மாலை தொடுக்க போன்ற பிற உபயோகத்திற்கு பயன்படுத்துகின்றனர். சாகுபடி செய்வது எளிது ஆனால் சந்தை படுத்துதல் மிகவும் முக்கியம். எனவே இட்லிப் பூ  சாகுபடியை தொடங்குவதற்கு முன் அப்பகுதியில் சந்தை வாய்ப்பினை அறிந்து சாகுபடியில் ஈடுபட வேண்டும் என்று திரு. சக்திவேல் அவர்கள் அறிவுருத்தினார்.

| அறுபது செண்ட் நிலத்தில் இட்லிப் பூ  சாகுபடி | | |
|---|---|---|
| உழவு | 300 | |
| குப்பை எரு (மூன்று டன்) | 3,000 | |
| செடி ரூ.4 * 1000 | 4,000 | |
| குழி எடுத்து நடவு செய்ய | 500 | |
| சொட்டுநீர் அமைக்க | 5,000 | |
| களை | 2,400 | |
| பவர் டில்லர் 1 மணி நேரம் | 500 | |
| கடலைப் புண்ணாக்கு | 900 | |
| பூ ச்சிக்கொல்லி | 400 | |
| மகசூல் 170 கிலோரூ.50 * 170 கிலோ | | 8,500 |
| ஊடுபயிர் வரவு | | |
| வெங்காயம் 3 மாதம் | | 25,000 |
| சாமந்திப் பூ  4 மாதம் | | 7,000 |
| மொத்தம் | 17,000 | 40,500 |
| ஒரு வருடத்தில் கிடைக்கும் நிகர லாபம் | | 23,500 |

மகசூல் கிடைக்க ஆரம்பித்த பிறகு முதல் ஆறு மாதங்களுக்கான கணக்கு இது. இதைத் தொடர்ந்து ஒரு நாள் இடைவெளியில் அறுவடை என்பதால் அடுத்த ஆறு மாதங்களில் சராசரியாக சுமார் 700 கிலோ வரை பூ கிடைக்கும். இதன் மூலம் 35,000 ரூபாய் கிடைக்கும். ஆண்டுக்கு கணக்கிட்டால், 70,000 ரூபாய். இதுவே ஒரு ஏக்கருக்கு கணக்கிட்டால் ஒரு ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய்க்கும் மேல் கிடைக்கும். ஆரம்ப செலவுகள் அடுத்தடுத்த மகசூலுக்கு இல்லை என்பதால், லாபத்தின் அளவானது அதிகரிக்கவே செய்யும்.

**தொடர்புக்கு** : Dr.சக்திவேல்
மணிவிழுந்தான் காலனி,
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.**அலைபேசி** : 94865 - 96032